மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.33/2025</u>

2026 ம் ஆண்டு ஜுலை 22 ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சதீஸ்குமார் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>22.07.2026 வா.சா.1 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். இந்த வழக்கிற்காக கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. 07.12.2010 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட கணினி நகல் – வா.சா.ஆ.11

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கில் பி.வா.சா.ஆ.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ள நாச்சிமுத்து எனது உறவினரா என்றால் இல்லை உள்ளூர்காரர் பி.வா.சா.ஆ.5 ஆக இந்த வழக்கில் சாட்சியமளித்துள்ள மணிவேல் என்பவர் சுப்புராய கவுண்டர் மனைவியின் நல்லம்மாள் என்பவரின் உடன் பிறந்த சகோதரரின் மகன் என்று சொன்னால் இல்லை. மணிவேல் எந்த ஊர்க்காரர் என்றால் அவரும் உள்ளூர்காரர் தான்.

சுப்புராய கவுண்டரின் மனைவி பெயர் நல்லம்மாள் என்று சொன்னால் சரிதான்.

2. நல்லம்மாள் என்பவர் அய்யம்பாளையம் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் இல்லை எங்கள் பெரிய தாத்தாவை திருமணம் செய்து கொண்டுதான் அவர் அய்யம்பாளையம் வந்தார். நல்லம்மாள் எந்த ஊரில் இருந்து வந்தவர் என்று சொன்னால் அது எனக்கு சரியாக தெரியாது. எனக்கும் அவர்கள் குடும்பத்திற்கும் இடையே பேச்சுவார்த்தை இல்லை. அதனால் அவர்கள் குடும்பத்தை பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

3. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 ஆவணம் நல்லம்மாள் என்பவரின் பெண்மக்கள் ஒரு ஜெகதீஷ் என்பவருக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய பத்திரம் என்று சொன்னால் சரிதான். அதில் பழனிச்சாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட வழக்குச் சொத்திற்கு அருகாமையில் உள்ள சொத்துக்களை பொறுத்து கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணத்தில் நல்லம்மாள் என்பவருக்கு நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்பட்ட சொத்து என கண்டு கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

4. மேற்படி ஆவணத்தில் கிரைய சொத்து பரம்பரை சொத்து என்றோ, வாய்மொழி பாகப்பிரிவினையின் அடிப்படையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று கண்டோ கிரையம் செய்து கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் ஆமாம். நான் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களுக்கு எதிராக பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றும், தாவா சொத்துக்கள் நாங்கள் சொல்வதுபோல் பரம்பரை சொத்துக்கள் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் மற்றும் நல்லம்மாள் சொத்து ஆகியவை எந்த காலத்திலும் மாரியப்ப கவுண்டர் என்பவர் பெயரில் இருந்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

5. வா.சா.ஆ.11 ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ள தங்கம்மாள் மற்றும் சுமதி ஆகியோர்களோடு எங்களுக்கு பேச்சு வார்த்தைகள் உள்ளதா என்றால் முன்பு இருந்தது தற்போது இல்லை மாரியப்ப கவுண்டர் எங்கே வைத்து இறந்தார் என்பதை பொறுத்து நான் மேற்படியாரின் இறப்புச் சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அவர் அய்யம்பாளையத்தில் தான் இறந்தார். மாரியப்ப கவுண்டர் என்பவர் எனது தாத்தா பழனிச்சாமி என்பவரோடு எட்டிமலை கிராமம் சென்று அங்கு வைத்து இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

6. அதற்கு பின்பு எனது தாத்தா பொள்ளாச்சிக்கு சென்று லாரி ஓட்டி வந்தார் என்றால் பொள்ளாச்சியில் வேலை தான் செய்து வந்தார். பின்பு எங்கள் தாத்தா அய்யம்பாளையம் வந்து நத்தம் நிலத்தில் குடியேறி வீடு கட்டினார் என்றும் அதன் அடிப்படையில் தான் அவருக்கு தாவா சொத்துக்களை பொறுத்து அரசால் நத்தம் பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எந்த வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடமிருந்து நான் பணத்தை பறிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக பொய்யாக நானும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து கொண்டு

இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.07.22 18:46:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.